1998 மே 5]

அவர்களுடைய கருத்தைக் கருத்திலே கொண்டு பணி அமர்த்தலாம் என்று சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 433, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

433—

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை விலை நிர்ணயம் செய்யாமல் வழங்குதல்

***13038—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தரமணியிலுள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை விலை நிர்ணயம் செய்யாமல் இலவசமாகவே வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் எத்தனையோ பேர் பிளாட்பாரங்களில் வாழ்கின்றனர். வறுமைக் கோட்டுக்குக் கீழ் அல்ல; வறுமையில் வாடுகின்றவர்கள் பிளாட்பாரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்குக் குடியிருப்புகளை விலை நிர்ணயம் செய்து கொடுக்கும்போது, அந்தத் தொகையைக் கட்ட முடியாமல், வட்டிக்கு மேல் வட்டி ஏறி, பின்னாலே அதனைத் தள்ளுபடி செய்கிற நிலைமை இருக்கிறது. எனவே, மீண்டும் இதைப் பரிசீலனை செய்து, ஏழை மக்களுக்கு இலவசமாக வீடுகளை வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் சென்னை, தரமணியில் 480 குடியிருப்புகள், குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ளன. ஒரு குடியிருப்புக்கான செலவு 1,48,000 ரூபாய். இதன் அடிப்படையில் வாரியத்திலே ஒப்புதல் பெறப்பட்டு, செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு, முதல் தவணையாக கட்டுமானச் செலவு 30 சதவிகிதம் அதாவது, ரூ.44,448 பெற்றுக்கொண்டு,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மீதமுள்ள தொகையை மாதாந்திரத் தவணையாகச் செலுத்துகின்ற திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை தரமணி பகுதியில் 128 நபர்கள் ஒதுக்கீடு பெற்றுள்ளனர். எனவே, இலவசமாக வழங்க இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-00

திரு. மீ. அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அரசின் மூலமாகத் துவக்கப்பட்டபோது எந்த நோக்கத்தோடு துவக்கப்பட்டது? இதில் அரசினுடைய மானியம், கடனாக வழங்கப்பட்டு இருக்கிறதா அல்லது மானியமாகவே வழங்கப்பட்டு இருக்கிறதா? குடிசை வாழ் மக்களுக்கு அதை இலவசமாக அளிக்கத்தானே திட்டம் துவங்கப்பட்டது? இப்போது திடீரென்று விலை நிர்ணயிக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் ஹட்கோ நிதி உதவியுடன் - 30 சதவீதம் அரசு மானியமும், ஹட்கோவின் 70% கடனுதவியுடனும் குடிசை மாற்று வாரியத்திற்காக இது திட்டமிடப்பட்டு, இடையில் 1989ஆம் ஆண்டு அங்கே பிலிம் இன்ஸ்டிடியூட்டுக்காக, தரமணியில் உள்ள செய்தித் துறையில் வேலை செய்பவர்கள் சேர்க்கப்பட்டு பின்னர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மறுபடியும் அவர்கள் தேவை இல்லை என்று கொடுத்ததன் காரணமாக இந்தத் திட்டம் குறைந்த வருவாய்த் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 434, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

434—

ஒரத்துப்பாளையம் அணைத் தண்ணீரைச் சுத்தப்படுத்துதல்

***3857—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், ஒரத்துப்பாளையம் அணைத் தண்ணீர் விஷத் தன்மையுள்ளது என்று அரசிற்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?